House sites for Harijans.

* 554 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether this Government has any proposal to allot house sites for Harijans who can construct houses at the earliest and form a colony ;

(*b*) if so, the total area and the places chosen after the advent of the new ministry for allotment;

(*c*) whether the scheme will be open to all Harijans irrespective of their employment positions; and

(*d*) if not, the procedure that will be followed while alloting plots?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் சென்னை மாநகரம், நீலகிரி நீங்கலாக ஏனைய எல்லா மாவட்டங்களிலும் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை 29,106 வீட்டு மனைகள் கையகப்படுத்தப்பட்டன.

(உ) இல்லை.

(எ) சொந்தமாக வீட்டுமனைகள் இல்லாத அரிசனங்கள் அனைவருக்கும் வீட்டுமனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், தாங்களாகவே பணம் கொடுத்து வீட்டுமனைகள் வாங்கக்கூடியவர்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு குடும்பத்தலைவரின் பணம் கொடுக்கும் சக்தியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மதிப்பிட்டு அவர்களிடமிருந்து மனையின் விலையை வசூலிக்கின்றனர்.

Dr. H. V. HANDE : Will this Ministry consider the necessity of giving three types of assistance to these Harijans? Firstly, those who want to take sites can be given sites. Secondly, for those who want to have houses built in slum areas where Harijans are predominant, such areas can be earmarked and the houses constructed through the State Housing Board. Thirdly, there are those who want to get houses constructed through the Corporation. How exactly are the Government going to solve the problem of provision of houses to Harijans?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே வீட்டு மனை இல்லாதவர்களுக்கு நஞ்சை, புஞ்சையாக இருந்தாலும் கையகப்படுத்தி அவர்களுக்கு கொடுத்திருக்கிறது. இந்த இடங்களில் வீடுகட்ட முடியாமல் இருப்பவர்களுக்கு தீப்பற்ருத வீடுகளைப்போல ஆயிரம் ரூபாய் வீடு ஒன்றுக்கு எனப் பணம் ஒதுக்கி கட்டித்தர ஏறத்தாழ 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலும் சேரிப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக நீண்டகால திட்டமிட்டு 1970–71-க்கு 1 கோடி செலவு செய்து காலனியை அமைத்துக்கொடுக்கும் திட்டம் பற்றி ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிருர்கள்.

இன்னும், வேலையில் இருந்து, ஒரு பகுதி பணம் செலுத்தக்கூடியவர்களுக்கு என்று ஸ்டேட் ஹவுஸிங் போர்டில் 10% ஒதுக்கப்படுகிறது.

தனிப்பட்ட வகையில் நிலம் வைத்துக்கொண்டு வீடு கட்ட விரும்புகிறவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களே உதவி வருகிற திட்டமும் இருந்து வருகிறது.